**செய்தி வெளியீடு எண்: 603** **நாள்: 11.10.2012**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் **9.10.2012** அன்று தலைமைச் செயலகத்தில், **2010–2011**ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) ஆதாயப் பங்கு தொகை **14** கோடியே **48** லட்சம் ரூபாய் மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் (TAMIN) ஆதாயப் பங்கு தொகை **78** லட்சத்து **69** ஆயிரம் ரூபாய் ஆகியவற்றிற்கான காசோலைகளை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. பி.தங்கமணி அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 2010-2011ம் ஆண்டில் **908** கோடியே **73** லட்சம் ரூபாய் வருமானத்தையும், **121** கோடியே **95** லட்சம் ரூபாய் நிகர லாபத்தையும் ஈட்டியுள்ளது. இதில் தமிழக அரசின் பங்கு முதலீடான **57** கோடியே **91** லட்சத்து **25** ஆயிரம் ரூபாய்க்கு **25** சதவிகித ஆதாயப் பங்குத் தொகை **14** கோடியே **48** லட்சம் ரூபாய் ஆகும்.

தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) 2010-2011ஆம் ஆண்டில் **102** கோடியே **22** லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளது. இந்நிறுவனத்தில் தமிழக அரசின் பங்கு முதலீடான **15** கோடியே **73** லட்சம் ரூபாய்க்கு **5** சதவிகித ஆதாயப் பங்குத் தொகை **78** லட்சத்து **69** ஆயிரம் ரூபாய் ஆகும்.

**2010–2011**ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) ஆதாயப் பங்கு தொகை **14** கோடியே **48** லட்சம் ரூபாய் மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் (TAMIN) ஆதாயப் பங்கு தொகை **78** லட்சத்து **69** ஆயிரம் ரூபாய், என மொத்தம் **15** கோடியே **26** லட்சத்து **69** ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் **9.10.2012** அன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. பி.தங்கமணி அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர், தொழில்துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கனிம நிறுவன மேலாண்மை இயக்குநர் ஆகியோர் உடனிருந்தனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 11.10.2012